சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 74/2022

பெயர் திரு. நடராஜன் நாள். 03.07.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கை நான் 9 சென்டிற்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தின் புல எண் 237/12ஏ. பழைய புல எண். 237/11 ஆகும். பழைய பில எண்ணின் மொத்த விஸ்தீரணம் 30 சென்ட் ஆகும். அந்த 30 சென்ட் ஆதியில் பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பெருமாளின் பாட்டனார் பெயர் காத்தான் என்றால் சரிதான். காத்தானுக்கும், எங்கள் குடும்பத்தற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் 2 அல்லது 3 கால் பங்காளிகள் ஆவர். பெருமாளுக்கு செல்லப்பன் மற்றும் துரைகண்ணு ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். செல்லப்பனுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என் உறவினர்கள் என்று குறிப்பிடவில்லை. உண்மையில் பெருமாள் எனக்கு உறவினராக இருந்திருந்தால் வழக்குரையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என் உறவினர் என்று குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. காத்தான் மகன் பெருமாள் 1986ம் வருடம் இறந்துபோனார் என்றால் எனக்கு தெரியாது. அதன் விவரம் என் தகப்பானர் செல்லப்பனுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பானர் செல்லப்பனுக்கு வழக்குச் சொத்து எவ்வாறு அவருக்கு கிடைக்கப்பெற்றது என்று எனக்கு தெரியாது. துரைக்கண்ணு எங்களுக்கும் இடையே எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் எங்களுக்கம், அவர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. பொதுவாக ஒரு

இடம் சொத்து கிரயம் பெறும்பொழுது, அந்த சொத்து அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்ற விவரத்தை தெரிந்து கொண்டு தான் கிரயம் வாங்குவார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் செல்லப்பன் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று கருதிதான் கிரயம் பெற்றுள்ளார். யாருடைய பூர்வீக சொத்துக்கள் என்றால் காத்தான் மற்றும் பெருமாளின் பூர்விக சொத்துக்களாகும். வழக்குச் சொத்தின் புல எண் நான் ஏற்கனவே தவறாக கூறிவிட்டேன். அதன் சரியான புல எண் 238/11ஏ ஆகும். புல எண் 238/11 என்பது 1985ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது. அதனால் என் வழக்குரையில் 1982ல் வழக்குச் சொத்தை கிரயம் வாங்கியதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3) 1985ல் உட்பிரிவு செய்வதற்கு முன்பு கிரயம் வாங்கியதாக என் வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக கிரயம் வாங்கியதாக கூறுவது எனக்கு நேரடியாகத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அப்பொழுது என் தகப்பனாருடன் இருந்தேன். 1982ல் கிரயம் வாங்கியது பற்றி தெரியும்பொழுது 1986ல் பெருமாள் இறந்தது பற்றி எனக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அதன் விவரம் தெரிந்து நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சம்மந்தமாக அடங்கல் கணக்குகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வழக்குச் சொத்தின் நான்கு எல்லைகள் சொல்லவிலலை என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு நான்கு எல்லைகள் தெரியும். வடக்கு பகுதியில் விநாயகம், மேற்கே மலர் இடம், தெற்கே மல்லிகா இடம் மற்றும் கிழக்கே கிழக்கு கடற்கரை சாலைக்காக இடம் எடுக்கப்பட்டுள்ளது. நான் கூறும் நான்கு எல்லைகள் தவறு என்றாலும், அதனுள் வழக்குச் சொத்துக்கள் வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு மற்றும் முதல் விசாரணை விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். நான் அனுபவம் வாயிலாகவும், பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எதிரிடை மூலம் பரிகாரம் கோரியுள்ளேன். எதிரிடை அனுபவம் நான் கோரியுள்ளதால் வழக்குச்

சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமையான சொத்து என்று கருதவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எதிரிடை அனுபவம் கோரும்பொழுது 1982ல் பெற்றதாகக் கூறும் வாய் மொழி கிரயம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

4) வழக்குச் சொத்தை பிரதிவாதிகள் தான் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், நான் எக்காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2001ம் ஆண்டு பிரதிவாதிகள் என் பெயரில் உள்ள பட்டாவை ரத்துசெய்ய வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்தார்கள் என்றால் சரிதான். வட்டாட்சியர் விசாரணைக்கு நான் சென்று வாக்குமூலம் அளித்துள்ளேன். அந்த விசாரணையில் கிராம நிர்வாக அலுவலர் என்ன வாக்குமூலம் அளித்தார் என்று எனக்கு தெரியாது. அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் சார் ஆட்சியரிடம் அந்த மனு நிலுவையில் உள்ளது. வட்டாட்சியர் அதில் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்று எனக்கு தெரியாது. வட்டாட்சியர் என் பெயரிலும், என் சகோதரர் பெயரிலும் பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனை ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்தார் என்றாலும் சரியல்ல. அதன் உத்தரவு மீது சார் ஆட்சியரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்து அதிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வழ்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான விவரங்கள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், என் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என் பெயரிலும், 2ம் வாதி பெயரிலும் உள்ள பட்டாவை வருவாய் துறையினர் ரத்து செய்துவிடுவார்கள் என்பதினால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) வழக்கு புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 15 சென்ட். அதில் 6 சென்ட் கிழக்கு கடற்கரை சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதில் எவ்வளவு இழப்பீடு வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. செல்லப்பன் நாயக்கர் மகன் என்ற

பெயரில் தான் நாங்கள் நஷ்ட ஈடு பெற்றுள்ளோம் என்றால் ப.பெருமாள் நாயக்கர் மகன் செல்லப்பன் நாயக்கர் என்னும் பெயரில்தான் நஷ்ட ஈடு பெற்றுள்ளோம். நான் கூறும் பெருமாள் நாயக்கரின் தகப்பனார் பெயர் பச்சையப்பன். வா.த.சா.ஆ.1ற்கு பிறகு பட்டா எங்கள் பெயருக்கு வந்தது என்றால் சரிதான். அந்த பட்டாவின் அடிப்படையில்தான் இழப்பீடு பெற்றோம் என்றால் சரிதான். என் தகப்பனார் எக்காலத்திலும் பிதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து கிரயம் வாங்கியது கிடையாது என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் என் தகப்பனார் செட்டில்மென்ட் எழுதிக் கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. தவறான செட்டில்மென்ட் ஆவணம் மூலம் தவறாக பட்டா பெற்றுள்ளோம் என்றாலும், அவை 1 முதல் 3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. அதனால் நில ஆர்ஜித இழப்பீடு பெறுவதற்கு எங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தான் இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் பெற்ற இழப்பீட்டுத் தொகையை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு திருப்பி செலத்த கடமைப்பட்டளளோம் என்றல் சரியல்ல. என் வழக்கு அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.